**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.740/2022**
**Prosecution Witnesses :4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **தனசேகர்** | Caste | : |
| Father Name/ Husband Name | : **மோகன்தாஸ்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(26.11.2025)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் திருத்தங்கல்லில் குடியிருந்து வருகிறேன். நான் சிவகாசியில் Hero Honda Store – ல் பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான்.எனது சித்தப்பா நாகராஜ் இறந்தது சம்பந்தமாக போலிசார் 2021 வது வருடம் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து கேட்டார்கள். அதில் நான் கையெழுத்து போட்டேன். மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

நான் போலிசார் விசாரணையின் போது சம்பவ இடத்தை பார்வை இட்டு வரைபடம் வரைந்து அது சமயம் தயார் செய்து பார்வை மகசரில் கையொப்பம் செய்ததாக சொல்லி விட்டு தற்சமயம் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**